R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Date of Publication 10th of Every Month: Licensed to Post Without Pre-Payment
Registration No. TN/WPP-169/SR/2015-2017
Posted on 10th of Every Month 2017 at Batlagundu Post office.
October 2017

நீங்கள்
உலகமெங்கும்
போய்,
சர்வ
சிருஷ்டிக்கும்
சுவிசேஷத்தைப்
பிரசங்கியுங்கள்
மாற்கு 16:15



இது நம்
ஆண்டவர் இயேசுவின்
கட்டளை
அதை நிறைவேற்ற
புறப்படுவோம்
வாருங்கள்!

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M & Our TV Program: Nambikkai TV Every Monday & Saturday 7.30 P.M & Tamilan TV Every Wednesday 6.15 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 17 | அக்டோபர் 2017 | கனி 11

## But godliness with contentment is great gain - Timothy 6:6



போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே
மிகுந்த ஆதாயம் – 1தீமோத்தேயு 6:6

THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 31 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 31 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்கள்



தென்மாவட்ட வேதாகம பள்ளி - வத்தலக்குண்டு



வட மாவட்ட வேதாகம பள்ளி - சென்னை



ஊழியத்திற்கு ஒய்வு இல்லை

**THE WORD OF CHRIST**
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 206

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. சுகஜீவிகளாகிய ஸ்திரீகளே, எழுந்திருந்து என் வார்த்தைகளைக் கேளுங்கள்; நிர்விசாரமான குமாரத்திகளே எதற்கு செவி கொடுங்கள் என கர்த்தர் சொல்லுகிறார்?
2. அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தானா?
3. ஒரு மனைவி தன் புருஷனுக்குத் தூரோகம் செய்வதுபோல், இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம் செய்தது என்னவென்று கர்த்தர் சொல்லுகிறார்?
4. எவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது?
5. ஒரு தேசம் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணிக் கொண்டேயிருந்து, பாவஞ்செய்தால் நான் அதற்கு விரோதமாக என் கையை நீட்டி, அதின் அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்து, அதில் பஞ்சத்தை அனுப்பி, மனுஷரையும், மிருகங்களையும் அதில் இராதபடி என்ன பண்ணுவேன் என்கிறார்?
6. ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்திக்க வேண்டுமா?
7. இதோ, ஆட்டுக்கும் ஆட்டுக்கும், ஆட்டுக்கடாக்களுக்கும், வெள்ளாட்டுக்கடாக்களுக்கும் நான் நியாயந்தீர்பேன் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் சொல்லியிருந்தார்?
8. எவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது?
9. அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள் கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள் நியாயசங்கம் உட்கார்ந்தது அப்பொழுது எது திறக்கப்பட்டது?
10. எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலைடைந்தோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**
*ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. ஆசிரியர்*

## இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

24

நாள்: 26.10.2017 வியாழக்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: J. லூர்துராஜ்
36, ரெயில்வே ரோடு
பாபநாசம் -614 205
தஞ்சாவூர் மாவட்டம்
தொடர்புக்கு: 9092066286



சிறுவர் பகுதி

# நமிலிருந்து அகற்றவேண்டும்

**வேதபகுதி: 1தீமோத்தேயு 1:19-20**



அப்போஸ்தலனாகிய பவுலை அறியாதவர்களே இருக்க முடியாது ஏனென்றால் பரிசுத்தவேதாகமத்திலே அவர்தான் அதிகமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு பரிசுத்தவானை முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஜனங்கள் அவனை பூமியிலிருந்து அகற்றவேண்டும் என்று சொன்னார்கள், சொன்னவர்கள் வேறுயாரும் அல்ல அவனுடைய சுய ஜனத்தார்களே! அவனுக்கு விரோதமாக மிகுந்த சத்தமிட்டனர். இன்றைக்கும் அப்படித்தான் சுய ஜனங்கள் நம்மை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதைப்போல பவுலை ஏற்றுக்கொள்ள வில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்று பின்பு எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கையில், ஞானதிருஷ்டியடைந்து அவரைத் (கர்த்தரைத்) தரிசித்தான். அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம்பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப்போ என்றார்.

அதற்கு பவுல்: ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை நான் காவலில் வைத்து ஜெபஆலயங்களில் அடித்ததையும், உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது நானும் அருகே நின்று அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்ததையும். இவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றான். அதற்கு அவர்: நீ போ, நான் உன்னைத் துரமாய் புறஜாதிகளிடத்திலே அனுப்புவேன் என்றார்.

அந்தப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலை கர்த்தர் எடுத்துபயன்படுத்தினார். அவன் மூன்று சுவிசேஷப்பயணத்தினால் அநேக சபைகளை ஏற்படுத்தினான். மேலும் 14 நிருபங்களையும் எழுதினான். அவன் சொல்லும்போது எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன் என்கிறார். அவர் காலதாமதம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, தாமதமில்லாமல் ஊழியம் செய்யும்படியாக கடந்து சென்றார். இந்தப்பவுலைப்போல கர்த்தருக்கு நீங்களும் ஊழியம் செய்வீர்களா?

**மனப்பாட வசனம்:** **“தீர்க்கதரிசி ஒருவனும் தன் ஊரிலே அங்கீகரிக்கப்படமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” (லூக்கா4:24)**



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 17 அக்டோபர் -2017 கனி - 11

ஆசிரியருரை

# கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சி
## Perfect In Christ Jesus



ஒரு மனிதனை கிறிஸ்துஇயேசுவுக்குள் தேர்ச்சியடைய செய்ய அப்போஸ்தலனாகிய பவுல் மூன்று காரியங்களை ஒரே வசனத்தில் உணர்த்துகிறார். "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்" என்கிறார் (கொலோ.1:28). முதலாவது அவர் சொல்லும்போது அவரையே நாங்கள் அறிவித்து என குறிப்பிடுகிறார். ஒரு மனிதனை கிறிஸ்துஇயேசுவுக்குள் தேர்ச்சியடையப் பண்ண வேண்டுமானால் நாம் முதலாவது ஆண்டவர் இயேசுவை அறிவிக்கவேண்டும். அநேகர் இதைச்செய்ய தவறிவிடுகின்றனர். தங்களுடைய யோசனையின்படியும் அல்லது நிர்வாகத்தின் ஆலோசனையின்படியும் எதையாவது கொடுத்து, அல்லது அன்பாக அவர்களோடு பழக்கம் வைத்து இன்னும் இப்படிப்பட்ட ஏதாவது ஒன்றைச் செய்து அவர்களை ஆதாயம் செய்ய விரும்புகின்றனர். "யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" என்கிறார் பவுல் (1கொ.1:22,23).

இன்றைக்கு அற்புதங்களையும் அடையாளங்களையும் ஜனங்கள் நாடுகிறார்கள். வேதாகமத்திலே சொல்லப்பட்ட அடையாளங்களும் அற்புதங்களும் அவர்களுக்கு போதாமலிருக்கிறது. இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் என்று அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய சுவிசேஷத்தை எழுதி முடித்திருக்கிறார். வேதாகமத்தில் சொல்லப்பட்ட அற்புதங்கள் ஒரு மனிதனுடைய விசுவாசத்திற்கு போதுமானது. அற்புத கர்த்தர் தம்மோடு இருந்த காலத்தில் அநேக அற்புதங்களை கண்ணாரக்கண்ட தோமா என்ற சீஷன். இயேசு உயிர்த்தெழுந்த பின்பு மற்ற சீஷர்கள் சொல்வதை அவன் நம்பவில்லை. அவரைக் கண்டு அவருடைய

விலாவில் தன் கையைப்போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். அவனை கர்த்தர் கண்டு தோமாவே நீ என்னைக் கண்டதினால் விசுவாசிக்கிறாய் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல் யூதர்கள் மத்தியில் போதிக்கும்போது தாங்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள் என்பதற்கு அடையாளமாக ஒரு அற்புதத்தை அவர்கள் மத்தியில் செய்து காட்டவில்லை. ஆனால் அவர்கள் அதை எதிர்பார்த்தார்கள். யூதர்கள் அடையாளத்தையும், கிரேக்கர் ஞானத்தையும் தேடுகிறார்கள். ஆனால் பவுலோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அவர்களுக்குப்பிரசங்கித்தார். என் அன்பு சகோதரனே சகோதரியே நீ எதைத் தேடிக்கொண்டிருக்கிறாய்? அற்புத அடையாளங்களையா? அல்லது சிலுவையில் உனக்காக அறையப்பட்ட இயேசுவையா? நீ தேர்ச்சியடைய அவரைக்குறித்து அறிந்துகொள். பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கிக்கும்போது; "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள் என்றான்" (அப்.2:36). இங்கே பேதுரு தன்னைப் பற்றியோ அல்லது மற்ற அப்போஸ்தலர்களைப் பற்றியோ பேசாமல் சிலுவையில் யூதர்களால் அறையப்பட்ட கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் பற்றி பேசினார். இதைக் கேட்ட 3000 பேர் கர்த்தருடைய சுவிசேஷ சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டனர். மேலும், பவுல் சொல்லும்போது; "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" என்கிறார் (2கொரி.4:5). பல இடங்களில் பிரசங்கியார்கள் பிரசங்கிக்கிறார்கள். தங்களுடைய சொந்த காரியங்களையும், தங்களுடைய தேவைகளையும் சொல்லி இதற்காக ஜெபியுங்கள் என்கிறார்கள். இவ்விதமான பிரசங்கங்கள் ஒரு மனிதனை கிறிஸ்துஇயேசுவுக்குள் தேர்ச்சியடைய செய்யுமா?

இரண்டாவது பவுல் அந்த வசனத்தில் சொல்லும்போது; "எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி" என்று குறிப்பிடுகிறார். ஒரு மனிதனை கிறிஸ்துஇயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்த அவனுக்கு வேதாகமத்திலிருந்து புத்திமதிகளை சொல்லவேண்டிய பொறுப்பு இருக்கிறது. "நீங்கள் புத்தியைக்கேட்டு ஞானமடைந்து அதைவிட்டு விலகாதிருங்கள்" என்று நீதி.4:13-ல் படிக்கிறோம். ஒவ்வொருவரும் புத்தியை கேட்டு ஞானமடைய வழிஏற்படுத்தவேண்டும். என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியை சம்பாதித்துக்கொள் என திருமறை நமக்குப்போதிக்கிறது. மேலும், "புத்திமதியை உறுதியாய் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே; அதைக்காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்" என காண்கிறோம் (நீதி.4:13). சிலர் புத்திமதியான வார்த்தைகளை அலட்சியப்படுத்துகிறார்கள். ஆனால் அது ஒரு மனிதனுக்கு ஜீவனாக இருக்கிறதாக படிக்கிறோம். ஞானவான்கள் புத்திமதிகளை ஏற்றுக்கொள்வார்கள். துன்மார்க்கரோ புத்திமதிகளை அலட்சியப்படுத்துகிறார்கள். பவுல் தீமோத்தேயு என்ற உத்தம வாலிபனுக்கு எழுதும் புத்திமதியை கவனியுங்கள்; "உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்" என்றார் (1தீமோ.4:16). இந்த பவுலின் புத்திமதிகளை ஏற்றுக்கொண்ட தீமோத்தேயு அந்தவிதமாக ஊழியத்தை செய்து தன்னைக் காத்துக்கொண்டான். சிலருக்கு



கொடுத்தார். (ரோம.3:25; 1பேது.1:18,19).

2. நாம் மரணத்துக்குள்ளாகதபடி அவர் நம்முடைய இடத்தை எடுத்துக்கொண்டார்.

3. இயேசுவின் மரணத்தினாலே நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட முடியும் (ரோம.5:10).

4. நமக்கு இனி ஒருபோதும் மரணம் பயம் தேவையில்லை.

### VI. தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்க.

மத்தேயு 16:16-18 அவருடைய அரசு பூமிக்குரிய அரசல்ல ஆனால் அது ஆவிக்குரியது. சபை என்பது இராஜ்யம் 18-ம் வசனத்திலேயே சபை என்று அழைக்கப்பட்டிருக்கிறது. 10-ம் வசனத்திலே இராஜ்யம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

1. என் சபை என்பது கிறிஸ்துவின் யோசனையும் திட்டமுமாயிருந்தது. சபை என்பது தேவனுடைய நித்திய நோக்கத்தில் இருந்தது. (எபே.3:9-11).

தேவத்துவத்தில் ஒருவராக இருந்த இயேசு அதைக் கட்டினார். இதுவே அதை முக்கியமானதாக்குகிறது.

2. "கட்டுவேன்" என்பது கிறிஸ்துவின் திட்டம் நிறைவேறுதலைக் காண்பிக்கிறது.

அ. கிறிஸ்து இவற்றைச் சொன்னபோது அது எதிர்காலத்தைக் குறிப்பதாக இருந்திருக்கலாம்.

ஆ. கட்டிடத்தை இயேசுவே கட்டுவார்.

1. அவர் தமது பூமிக்குரிய ஊழியத்தின் மூலம் நிறைவேற்றினார். அவர் (சபை) இராஜ்யத்தைக் குறிப்பிடுகிறார் (மாற்.9:1)

**பொது அறிவுச் சோதனை**

1. உலக சுற்றுலாதினம் என்று கடைபிடிக்கப்படுகிறது?
   அ) செப்டம்பர் 27 ஆ) மே 27 இ) ஏப்ரல் 27
2. மலரின் எந்தப் பகுதி கனியாக மாறுகிறது?
   அ) சூல்தண்டு ஆ) சூல்பை இ) சூல்
3. இண்டேலியம் கிடைக்கும் மாநிலம்?
   அ) கோவா ஆ) கொல்கத்தா இ) கேரளா
4. ‘பஸதேனா’ என்பது என்ன?
   அ) விண்வெளிக்கூடம் ஆ) சுற்றுலா தலம் இ) துறைமுகம்
5. உவமைக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?
   அ) சுரதா ஆ) பாரதியார் இ) திரு.வி.கா.

விடைகள்: 1. செப்டம்பர் 27 2. சூல்பை 3. கேரளா 4. விண்வெளிகூடம் 5. சுரதா


### உண்மையாயிரு ஊழியனே!

**நீ கொஞ்சத்திலே**
**உண்மையாயிருக்கும்போது,**
**உன்னை தெரிந்து கொண்ட கர்த்தர்**
**உன்னை**
**அநேகத்தின்மேல் அதிகாரியாக வைப்பார்.**
**பூமியிலே இத்தனை ஆசீர்வாதங்களை பெற்ற**
**நீ**
**உன் எஜமானனுடைய சந்தோஷத்தின்**
**வீட்டிற்குள் பிரவேசிக்கும்போது**
**எத்தனை ஆசீர்வாதங்களை காண்பாய்.**
**எனவே,**
**ஊழியனே**
**உண்மையாயிரு,**
**மரணபரியந்தமும்**
**உறுதியாயிரு...**

பாடம் - 24

## The New Birth - புதிய பிறப்பு - *Jerry Bates*

-சென்றமாத இதழின் தொடர்ச்சி




I. 1பேதுரு 2:24 பாவத்தை (மன்னிப்பை) தவிர வேறு எதையும் இயேசுவின் மரணத்தோடு அர்த்தப்படுத்திப் பார்க்க முடியாது.

1. இன்றைய உலகில் பாவம் என்ற எண்ணமே மறக்கப்பட்டிருக்கிறது.

2. பாவமில்லாதபடி இயேசுவின் மரணம் வெறும் அர்த்தமற்ற மிருகச் செயலாகும்.

அவர் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல் அதை இரட்சிக்கவே வந்தார் (யோவா.3:17,9:56)

1. பாவியை தண்டிக்க தேவன் விரும்புவதில்லை (2பேது.3:9)

2. குற்றங்காணத் தயராகவுள்ள ஒரு அரசனாகக் கடவுளைப் பார்க்கின்றனர்.

3. நினிவேயை அழிக்க விரும்பியதற்காக யோனாவை தேவன் கண்டனம் செய்தார் (யோனா 4:11).

தேவன் உங்களை நேசிக்கிறார் என்பதில் எப்போதாவது சந்தேகம் வந்திருந்தால் இயேசுவை நோக்கிப்பாருங்கள்.

தேவன் உங்களை மன்னிக்க கூடுமோ என்று சந்தேகித்தால் இயேசுவை நோக்கிப்பாருங்கள்.

**பிசாசின் கிரியைகளை அழிக்கவே இயேசு வந்தார்**

**சாத்தானின் கிரியைகள் என்ன?**

1. மனிதனை தேவனுக்கு பகைவனாக்குவது அவனை ஊழலுள்ளவனாக்குவது, பாவத்திற்குள்ளாக்குவது எடுத்துக்காட்டாக ஆதாம், ஏவாள்.

2. தேவ சித்தம் உலகில் நிறைவேறாமற் செய்வது.

3. எல்லா ஜீவராசிகளையும் மரணத்தின் பிடியில் வைத்திருப்பது. பாவத்தின் சம்பளம் மரணம் (எபி.2:15).

**II. இயேசு சிலுவையிலறையப்பட்டதும், சாத்தான்வென்று விட்டதாக நினைத்தான் (அப்.26:16).**

1. நம்முடைய பாவங்களை சிலுவைக்கு எடுத்துச் சென்றதால் கிறிஸ்து வென்றார் (2கொரி.5:21) தேவனோடுள்ள ஐக்கியத்தை இது மீட்டுக் கொடுத்தது (ரோம.5:10).

2. தன்னிடத்தில் எந்தப் பாவமும் இல்லாததினால் இயேசு வென்றார் (1பேது.2:21,22).

**III.இயேசுவின் சிலுவை மரணம் நாம் ஜீவனுள்ளோராகும் வாய்ப்பை சாத்தியமாக்கிற்று.**

1. நாம் மீட்கப்படும்படியான விலையை அவர் நமக்காக சிலுவையில்



இந்தவிதமான புத்திமதியான வார்த்தைகள் சொல்லிவிட்டால் போதும் எனக்கெல்லாம் யாரும் ஒன்னும் சொல்லவேண்டாம் எனக்கு எல்லாம் தெரியும் என்பார்கள். கற்றுக்கொள்ளுகிற ஒரு வாலிபம் வயதில் முதிர்ந்தவர்கள் சொல்லும் புத்திமதியான வார்த்தைகளை கவனிக்கவேண்டும். அது அவனுடைய வாழ்க்கைக்கு பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கும். நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய இந்த விதமான புத்திமதிகளை ஏற்றுக்கொண்டு உங்களைக்குறித்தும் உங்களுடைய உபதேசத்தை குறித்தும் எச்சரிக்கையாயிருந்து, பேச்சிலும் நடக்கையிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்கபிரயாசப்படுங்கள்.

மூன்றாவது, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம் என்கிறார். கடனுக்காக உபதேசிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. ஞானமான உபதேசம் மிகவும் முக்கியம். ஞானமான உபதேசம் என்றால் உலக ஞானத்தைக் கற்றுக்கொடுப்பதா அல்லது வாழ்க்கையின் ஞானமான காரியங்களைக் கற்றுக்கொடுப்பதா? இவைகளையெல்லாம் கொடுக்க உலக கல்லூரிகள் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவுக்குள் தேர்ச்சியடைய வேதவசனங்களை ஞானத்தோடு உபதேசம் பண்ணவேண்டும். "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" என்று பேதுரு சொல்லுகிறார் (1பேது.4:11). ஒருவர் போதிக்க ஆரம்பித்துவிட்டாலே அவர் வாயிலிருந்து வருவதெல்லாம் வேதாகமத்தின் வசனங்களாகவே இருக்கவேண்டும். ஒரு வசனத்தை சொல்லிவிட்டு ஊர் கதையெல்லாம் சொல்லி பின்பு துவக்கின வசனத்தையே மறந்துவிடுவார்கள். அந்தவிதமாக பிரசங்கித்தால் அவர்கள் கர்த்தரையும் அவருடைய உபதேசங்களையும் அறிந்துகொள்ளுவதெப்படி?

"கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான்" (2யோவா.9-11). உபதேசம் பண்ணுகிறவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தாலோ, அந்த உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிறவர்களாயிருந்தாலோ அப்படிப்பட்டவர்களை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஏனென்றால்; அவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல என்று வேதாகமமே அப்படிப்பட்டவர்களைக்குறித்துச் சொல்லுகிறது. அப்படிப்பட்டவர்களை நாம் அடையாளம் கண்டு அவர்களை நம்முடைய வீடுகளில் ஏற்றுக்கொள்ளாமல் அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருக்கவேண்டும். அப்படி மீறி அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான் என படிக்கிறோம். ஆகையால் இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே, ஞானமான உபதேசம் வேதாகமத்திலிருந்து வெளிப்படவேண்டும். அந்த உபதேசம்

உங்களை கிறிஸ்துஇயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும். மற்றபடி உலகபிரகாரமான ஆறுதலான வார்த்தைகள் உங்களை சரிசெய்யாது, உங்களுடைய பாவமன்னிப்புக்கு உதவாது. கர்த்தருடைய வசனம் மட்டுமே உங்களை பரிசுத்தப்படுத்தும். அந்த வசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைபிரசங்கிக்கிற சபைகளுக்கு செல்லுங்கள், அதை பிரசங்கிக்கிற பிரசங்கியாரை உங்கள் வீடுகளில் ஏற்றுக்கொண்டு கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுத்து அதற்கு கீழ்ப்படியுங்கள். எல்லா புத்திக்கும்மேலாக தேவசமாதானம் அப்பொழுது உங்களை ஆட்கொள்ளும்.

மேலும் அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லும்போது; "நம்முடைய கர்த்தரும் இரட்சிகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்" என்கிறார் (2பேது.3:18). ஒரு மனிதன் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேர்ச்சியடைய அவன் அவருடைய கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளரவேண்டும். பொதுவாக பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்பவர்களிடம் ஏதாவது ஆண்டவரைப்பற்றி சொல்லிவிட்டால் போதும் உடனே அவர்கள் சொல்லுகிற வார்த்தை, "நாங்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் தான் தெரியாதவர்களிடம் போய் சொல்லுங்கள்" என்பார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அநுதினமும் தேவாலயத்திலே கூடினார்கள். எதற்காக? வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்க்கும்படியாகவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவில் தேர்ச்சியடையும்படியாகவும், ஜெபிக்கும்படியாகவும், ஐக்கியத்தில் வளர்ச்சியடையும்படியாகவும் கூடினார்கள். இதோ, சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையாயிருக்கிறது என்று சங்கீதத்தில் வாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் ஆசியா முழுமைக்கும் சுவிசேஷம் அறிவித்தவர். அவர் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேறினவர்களாக அநேகரை நிறுத்தும்படி அவரையே அறிவித்து, வேதாகமத்திலிருந்து புத்திசொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணினார். அதைப்போல நாங்களும் உங்களுக்கு போதிக்கவே விரும்புகிறோம். மற்றபடி மாய்மாலம் பண்ணவும், தந்திரமான வார்த்தைகளால் உங்களை வசனப் படுத்தவும், பொய்யான காரியங்களை உங்களிடத்தில் சொல்லி பணம் சம்பாதிக்கவும் விரும்பாமல் சத்தியத்தை சத்தியமாகவும் தேவனுடைய விருப்பத்தின் படியும் கர்த்தருடைய ஊழியத்தை அவருடைய திருசித்தத்தின் படிசெய்யவுமே விரும்புகிறோம். ஆகையால் நீங்கள் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேர்ச்சியடையும்படி அவரையும் அவருடைய உபதேசத்தையும் அறிந்துகொள்ளுங்கள்.

**சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்குமா?**

ஆம், இன்றைக்கு சிலுவையைப்பற்றிய உபதேசத்தைச் சொன்னாலே சிலருக்கு பைத்தியம் பிடிப்பதைப்போல இருக்கிறது என்கிறார்கள். அதைச் சொன்னாலே வேறுஏதாவது பேசுவோமா? என்று கேட்க ஆரம்பித்துவிடுகின்றனர். வேதாகமம் இதைக்குறித்துச் சொல்லும்போது; "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" என்று காண்கிறோம் (1கொரி.1:18). உன்னதமான நற்செய்தியை ஒரு மனிதன் வேண்டாம் என்று சொல்லுவானேயானால் அவன் கெட்டுப்போவான். அப்படிப்பட்டவனுக்கு அந்த செய்தி பைத்தியமாக இருக்கும்.



கேட்பார்கள், "இந்த தேவன் எங்கே இருக்கிறார்" என்று.

7. கிறிஸ்துவின் சபையானது ஜனங்களிடம் என்ன வேண்டுகிறது?

8. ஆராதனை செய்ய வேண்டிய நாள் எது?

9. ஆராதனையின் ஐந்து பாகங்கள் என்ன?

10. தேவனுடைய ஆராதனையை நாம் மாற்றுவோமேயாகில், அவர் சந்தோஷம் அடைவாரா, அல்லது நாம் எதையாகிலும் அத்துடன் கூட்டுவோமேயாகில் அல்லது எதையாகிலும் எடுத்துப் போடுவோமேயாகில் தேவன் சந்தோஷம் அடைவாரா?

11. உங்களுடைய சபையானது ஒவ்வொரு வாரமும் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூரும் அவருடைய இராப் போஜனத்தை புசிக்கிறதா?

12. உங்களுடைய சபையானது அதனுடைய ஆராதனையில் ஒரு கிட்டார் அல்லது பியானோ அல்லது வேறு ஏதோ ஒரு இசைக்கருவியை பயன்படுத்துகிறதா?

13. தேவனுடைய வார்த்தையை நாம் படிப்பதும், அதை எவ்வாறு உணர்ந்து கொள்ளும்படியாய் "சரியாக அதை பகுத்துப் பார்ப்பதும்" ஏன் மிக முக்கியமானதாயிருக்கிறது?

14. கிறிஸ்துவனிடமிருந்து தேவனுக்கு தேவையாய் இருக்கிற பலி என்ன?

உங்கள் நண்பர்களுக்கு
இவ்விதழை கொடுத்து
படிக்கச் சொல்லலாம்.
அவர்களும் சத்தியத்தை
அறிய ஒரு வாய்ப்பை
ஏற்படுத்திக் கொடுங்கள்.

**இவ்விதழுக்கான சந்தா செலுத்திவிட்டீர்களா!**

**வாசகர் கடிதம்**

**உங்களுக்காகவும் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கிறேன் கேள்விகள் மிகவும் பிரயோஜனமாகவும் வேதத்தில் தேடி கண்டுபிடிக்கவும் பிரயோஜனமாக உள்ளது பத்திரிக்கை, ஆவிக்குரிய செய்தி மிகவும் நன்றாய் இருக்கிறது.**



**God Bless you.**
**Mrs.Gnanam Philip**
**Covai**

**ஜெபியுங்கள்**

- ▸▸ வாசகர் கருத்தரங்கிற்காக...
- ▸▸ மாவட்ட ஊழியங்களுக்காக...
- ▸▸ வாசகர்கள் வசனத்தில் தேர்ச்சியடைய...
- ▸▸ சென்ற மாத கூட்டங்களில் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த ஆத்துமாக்களுக்காக...
- ▸▸ மாதந்தோறும் நடைபெறும் வேதாகம பள்ளிக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய வாலிப சுவிசேஷகர்கள் தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**<u>இயேசு சொல்கிறார்:</u>**

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**
**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**

***"என் இருதயத்தைச் சுத்தமாக்கினேன், என் பாவமறத் துப்புரவானேன் என்று சொல்லத்தக்கவன் யார்?"***
***நீதிமொழிகள் 20:9***

போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப்பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (1கொரி.11:23-25).

5. கிறிஸ்தவனுக்கு வாரத்தின் ஆறு நாட்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவன் வேலை செய்து அவனுடைய குடும்பத்திற்கு தேவையான பணத்தை சேர்த்து வைக்கலாம். அவன் சம்பாதிக்கின்ற பணம் அவனுடைய ஜீவனை அடையாளப்படுத்துகிறது.

நாம் நம்முடைய ஜீவியங்களை தேவனுக்கென்று அளிக்க வேண்டுமென்று விரும்புகிறார், அந்த ஈவின் ஒரு பாகமானது நாம் வேலை செய்து சம்பாதிக்கிற பணத்தின் வடிவிலே செய்யப்பட வேண்டியதாயிருக்கிறது. நாம் இதை ஒரு நடை முறை காரணத்திற்காக பணம் தேவையாயிருக்கிறது. அந்த பணத்தை பெறுவதற்கான ஒரே வழிமுறையானது கிறிஸ்தவர்களிடமிருந்துதான்.

சபைக்கு பிரதானமான முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு ஊழியங்கள் இருக்கின்றன. உலகத்திற்கு கிறிஸ்துவின் செய்தியை போதிப்பதும், தங்களுக்கு தாங்களே உதவி செய்ய இயலாத நிலையில் இருப்பவர்களுடைய பூமிக்குரிய தேவைக்காக உதவி செய்வதும் ஆகும். இவைகள் இரண்டுக்குமே பணம் தேவையாயிருக்கிறது.

ஆகையால் கிறிஸ்தவன் தன்னுடைய வார சம்பாத்தியத்தில் ஒரு பங்கை முதலாவது எடுத்து ஒரு தாராளமான பங்கை தேவனுடைய ஊழியத்திற்காக கொடுக்க வேண்டும். அவன் கட்டாயமாகவோ, விசனமாகவோ அதை கொடுக்க வேண்டாம், ஏனென்றால் தேவனுடைய கரத்திலிருந்து அவன் பெற்றிருக்கிற நல்ல காரியங்களை அவன் மற்றவர்களுடனே பகிர்ந்து கொள்ள விரும்புகிறான் (2கொரி.9:6,7). இதற்கு பதிலாக நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. "நான் வானத்தின் பலகணிகளைத்திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று என்னைச் சோதித்துப்பாருங்கள்" (மல்.3:10) என்றார்.

**கேள்விகள்:**

1. சகல அதிகாரமும் தேவனால் யாருக்கு கொடுக்கப்பட்டது?

2. குறிப்பிடப்பட்ட வசனப் பகுதிகள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்ற போதனைகளை அளிக்கின்றன இயேசு என்ன சொன்னார்?------------------------ பேதுரு என்ன சொன்னார்? பிலிப்பு பிரசங்கித்த பின்பு ஜனங்கள் என்ன செய்தார்கள்?------------------- ------------------ ----------------------------------

3. தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்கள் எதிலே ஒரு அங்கமாக இருக்கிறார்கள்?-------------------------- -------------- -----------------

4. கிறிஸ்துவின் சபையானது ஒரு பட்டணத்தில் அல்லது ஒரு சமுதாயத்தில் அமைந்திருக்க முடியுமா?

5. கிறிஸ்தவர்களின் ஆராதனையானது அவசியமாக தேவனுடைய வார்த்தையின்படியானதாக இருக்கவேண்டுமா?

6. அவிசுவாசிகள் தேவன் ஆவியாயிருக்கிறார் என்பதை குறித்து சந்தேகப்படுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் அவரை காணமுடியாது. (அவர்கள்



ஆனால் அதே செய்தி ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு இரட்சிப்பைக் கொடுக்கிறது. ஆகையால் இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது என காண்கிறோம். இச்செய்தி உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பை கொண்டுவரும். இதை நீங்கள் விசுவாசிக்கும்போது அது உங்களை அரவணைக்கும், இரட்சிப்பின் வழியில் உங்களை வழிநடத்தும். உங்கள் ஆவி ஆத்துமா சரீரத்திற்கு மீட்பைக் கொடுக்கும். இந்த உபதேசத்தை விட்டுவிடாதிருங்கள். அதை உங்களுடைய இருதயமாகிய பலகைகளில் எழுதிக்கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் இதை எடுத்துச்சொல்லுங்கள். அவர்களும் இந்த இரட்சிப்பை பெற்றுக்கொண்டு ஆசீர்வதிக்கப்பட உதவிடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**நடப்புச் செய்திகள்**

- **64 வகையான காய்ச்சலை அதிகரிக்காமல் தடுக்க நிலவேம்பு கஷாயம் காலை சாப்பிடும் முன் 15 முதல் 30 மில்லி குடிக்கலாம்.**
- **தமிழ்நாடு மாநில 'ஹஜ்' கமிட்டி தலைவராக, கோவை மாவட்டம் யுனைடைட் ஜமாத் பொதுச் செயலர் அப்துல்ஜாபர் நியமிக்கப்பட்டுள்ளார்.**
- **திண்டுக்கல் பகுதியில் தேங்காய்க்கு விலை இருந்தும் வறட்சியால் விளைச்சல் இல்லாததால், விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.**

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

**தெரிந்து கொள்வோம்**

## இராட்சத எலி

K.R.K.Ravi Asir

- **இது சுண்டெலி, எலி போல கொறித்துத் தின்னும் பழக்கம் உடையது.**
- **இவை அளவில் மிகப் பெரியதாக இருக்கும்.**
- **பெருச்சாளியை விட மிகப் பெரிய இனவகையைச் சேர்ந்தது.**
- **சுண்டெலியை நாம் கையில் வைத்துக்கொள்ளலாம். ஆனால் இந்த எலிகள் மீது நாம் அமர்ந்து பயணம் செய்யலாம். அவ்வளவு பெரியவை.**
- **இவ் வகையான இராட்சத எலிகள் தென் அமெரிக்காவில் காணப்படுகின்றன.**
- **இதன் பெயர் 'கேப்பிரா' என்பதாகும்.**
- **இது நான்கரை அடி நீளமும் 55 கிலோ எடையும் கொண்டதாக இருக்கும்.**
- **இதை விட மிகப்பெரிய 'ராடென்ட்' வகை எலிகளில் ஒன்று அமெரிக்காவில் 'இன்டியானா' பகுதியிலுள்ள ஒரு மிருகக் காட்சி சாலையில் இருந்தது என்கிறார்கள். இதன் எடை 79 கிலோவாகும்.**

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**



## நாம் ஏன் ஆராதனையில் வாய்மொழி பாடலை மட்டும் கட்டாயப்படுத்துகிறோம்

### Why We Have Vocal Music Only In Worship

*J.C.Choate*



**கி**றிஸ்துவின் சபையாராகிய நாம் மற்ற அநேக சமயக் குழுக்களி லிருந்து வேறுபட்டிருக்கின்றோம், ஏனென்றால், நம்முடைய ஆராதனை யில் நாம் வாயினால் பாடுகின்றதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம். ஆனபடியினால், நாம் நம்முடைய பாட்டினை இசைக் கருவிகளோடு இணைக்கிறதில்லை. இது வித்தியாசப்படுத்துவதற்காக செய்வதில்லை என நான் தாமதமின்றிச் சொல்வேன். மாறாக, வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றபடியால், நம்முடைய ஆராதனை வேளைகளில் வாயினால் பாடுகின்றதையே ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டு விதமான இசை உண்டு. ஒன்று வாய்மொழியில் பாடுவது இன்னொன்று இசைக்கருவியினால் பாடுவது. வாய்மொழி சங்கீதமானது பாடுகின்ற, இனிமையான ஒலியெழுப்புகின்ற இணக்கமான மனிதக் குரல்களாக, மேலும் உலகத்தில் மிக அழகான சங்கீதமாக வெளிப்படுகின்ற ஒன்றாகும். இந்தவிதமான சங்கீதம் தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது மேலும் நம்முடைய சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதியாகசெலுத்தப்படுகிறது. இது முழுவதும் ஆவியாயும், ஜீவனாயுமிருக்கிறது. இசைக்கருவியின் இசை மனிதனால் உருவாக்கப்பட்ட இசைக்கருவியிலிருந்து வருகிறது. இவ்வகையான கருவிகள் ஜீவனற்றது. அவைகள் ஆத்துமா அல்லது ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அக்கருவிகளின் மேல் மனிதன் அடிப்பதினாலும், அவைகளை இழுப்பதினாலும் அல்லது அவைகளை மீட்டுவதினாலுமே அவைகள் ஒலிகளை எழுப்புகின்றதாயிருக்கிறது. இப்போது இதன் வினாவானது; தேவன் தம்முடைய சிருஷ்டிகள் தம்மை துதிக்கும்படி விருப்புகிறாரா அல்லது மனிதனுடைய படைப்புகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா? எது அவருக்கு மிகவும் விருப்பமுள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தர், “ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்” (எபி.13:15) என்கிறார். நாம் நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள். அது நம்முடைய கனியாக இருக்கும். நம்முடைய பேச்சு, நம்முடைய பாட்டு, நம்முடைய ஜெபங்கள், நம்முடைய துதியின் வார்த்தைகள் போன்றவைகளே நம்முடைய உதடுகளின் கனியாக இருக்கும். யாருக்கு இது செலுத்தப்பட வேண்டும்? நிச்சயமாக, தேவனுக்கே.

நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்கின்றதின் நோக்கத்தைத் தொடர்ந்து பார்க்கையில், பவுல், “சங்கீதங்களினாலும், கீர்த்தனை களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து” (எபே.5:19,20) என்று சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு அல்லது பாடிக்கொண்டு, அதாவது



நேரங்களில் தேவனுடைய வார்த்தை வாசிக்கப்படுகிறதினாலும், போதிக்கப்படுகிறதினாலும் நாம் அவருடைய போதனைகளை கேட்கிறோம். "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்...." (யோவான் 5:39). "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாகவும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ.2:15). "திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு!... (2தீமோ.4:2). "நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1பேது.2:3). "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங்.119:105).

4. தேவகுமாரனுடைய பெரிதான அன்பின்றி அவர் நம்முடைய பாவங்களுக்காக நம்முடைய ஸ்தானத்தில் மரிக்க விருப்பம் அற்றவராக இருந்திருப்பாரேயாகில், ஆராதனையிலே நாம் தேவனுடைய சிங்காசனத்தை நெருங்கிச் சேர அனுமதிக்கப்பட்டிருக்க மாட்டோம். இந்த காரணத்திற்காகவே நாம் அனைவரும் - நம்முடைய ஆராதனை உட்பட - இயேசுவின் நாமத்தினாலே செய்யப்படுகிறது. தேவனுடைய குமாரனின் அன்பை மறந்து விடுகிறதை தேவன் விரும்புகிறதில்லை, மேலும் ஆராதனையின் ஒருபாகமாக இயேசுகிறிஸ்துவை கனம் பண்ணும்படியாக நினைவு கூருதலை தேவன் உண்டாக்கியிருக்கிறார். இது பளிங்கு கல்லினால் கட்டப்பட்ட ஒரு நினைவுச்சின்னமல்ல, அல்லது செங்கல் மற்றும் சாந்தினால் கட்டப்பட்டதுமல்ல, அல்லது விலையேறப்பெற்றதும் நீடித்து உழைக்கக்கூடிய பொருட்களினால் கட்டப்பட்ட நினைவுச்சின்னமும் அல்ல இது ஆராதனை செய்கிற ஒவ்வொருவருடைய இருதயத்திலும் கட்டப்படுகிற நினைவுக்கு உரியதாக இருக்கிறது. ஒரு எளிமையான நினைவு கூருதலின் இராப்போஜனம்.

கிறிஸ்துவின் மரணம் அவருடைய சரீரத்தின் ஜீவனுக்கு விலைக்கிரயமாக இருக்கிறது. அவருடைய மரணத்துக்கு விலைக்கிரயமாக அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. அவருடைய மரணத்தினால், அவருடைய சரீரம் மற்றும் இரத்தத்தினால், நாம் இரட்சிப்பின் நம்பிக்கையுடையவர் களாயிருக்கிறோம்.

மெய்யான கிறிஸ்தவன் ஒவ்வொரு ஞாயிறு அன்றும் இந்த இராப்போஜனத்தை தாழ்மையோடே நெருங்கிச் சேருகிறான். கடந்த வாரத்தில் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒத்தவகையில் ஜீவித்திருக்கிறோமா என்று பார்க்க நம்முடைய இருதயங்களில் தேடுகிறோம். தகுதியான முறையில் நினைவுகூருதலின் பந்தியில் பங்குபெற நம்முடைய சிந்தைகளை ஆயத்தம் செய்தபிறகு தேவனுக்கு முன்பாக அவருடைய குமாரனை நினைவுகூர நாம் தலை வணங்குகிறோம். "அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம் பண்ணுகிறதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்கு 14:24-25).

"நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது உங்களுக்காகப்பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

பாடம் -12

## தேவனை தொழுது கொள்ளுதல்

## Worship of God

-Betty




பெண்கள் பகுதி

**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

**ஆராதனையின் ஐந்துபாகங்கள்**

1. ஆராதனையானது அவசியமாக ஒரு ஜெபம் நிறைந்த இருதயத்திலிருந்து எழும்பிவரவேண்டும். ஜெபத்தின் வழிகளிலே நாம் நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுடனே நாம் நேரடியாக பேசுகிறபடியினால் அது இவ்விதமாக செய்யப்பட வேண்டும். "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது" (1பேது.3:12). "பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச்சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்" (யோவான் 9:31). "மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்" (மத்.21:22).

2. ஜெபத்தின் மூலமாக தேவனை நெருங்கிச் சேரும் இருதயங்களுடனே ஆராதிக்கிறவர் பாடல் மூலமாக தன்னுடைய சிருஷ்டிகரை துதிக்க ஆயத்தமாகிறார். மனுஷன் உருவாக்கிய இசைக்கருவிகள் மூலமாக தேவன் தம்மை துதிக்க விரும்புகிறதில்லை. ஆனால் பதிலாக தேவன் தம்முடைய சொந்த இசையினாலே உருவாக்கிய இசைக் கருவியாகிய மனுஷனுடைய குரல் நாளன்கள் மூலமாக துதிக்கும்படியாக, ஆராதிக்கும்படியாக தேவன் தேடுகிறார். நாம் நம்முடைய சப்தங்களை இணக்கமான பாடலில் தேவனை மேன்மைப்படுத்தி அவர் நமக்குச் செய்த நன்மைக்காக நாம் அவரை துதிக்கிறோம். பாடல்கள் தேவனுக்கு முன்பாக மேல்நோக்கி அவருக்கு பிரியமானசப்தமாக தேவனுக்கு முன்பாக செல்கிறது மாத்திரமல்ல, அவைகள் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு போதிக்கும் ஒரு வழிமுறையாக இருக்கிறது.

"ஆகையால் அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்". "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன்பாடி" (கொலோ.3:16). "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம் பண்ணி நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து" (எபே.5:19,20).

3. இந்த நாட்களில் தேவன் மனுஷனோடுகூட பேசுவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது: ஏவப்பட்ட வார்த்தையாகிய வேதாகமத்தின் மூலமாக தேவன் தனக்கு போதிக்கும்படியாக கிறிஸ்தவன் அவரை அனுமதிப்பதென்பது ஆராதனையின் ஒரு முக்கியமானபாகமாக இருக்கிறது. பொதுவான ஆராதனை



பாடல்களின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாடிக்கொண்டு என்று சொல்லுவதை தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள். அத்தோடுகூட அவைகள் ஆவிக்குரியதாகவும் வேதவசனங்களுக்கேற்றபடியாகவும் இருக்கவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். கடைசியாக, அவர் இந்த சங்கீதங்கள் இருதயத்தில் பக்தியுடன் பாடப்படவேண்டும், வாத்தியக்கருவிகளினால் அல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இப்போது கிறிஸ்தவர்கள் பாடிக்கொண்டே இருந்தால் மட்டும், அவர்கள் தேவனை ஆராதிக்கமுடியுமா? ஒருவேளை நீங்கள் ஆம் என்று கூறலாம். ஆனால் வாத்தியக்கருவியோடு பாடுவதுபற்றி என்ன சொல்லலாம்? வேதவசனங்கள் அது பற்றி போதித்தால் அது நன்றாக இருக்கும், ஆனால் வேதவசனங்கள் எங்கே அவ்வாறு போதிக்கிறது. அவ்வாறு வசனங்கள் போதிக்கவில்லையென்றால், நம்முடைய சங்கீதத்திற்கு வாத்தியகருவியின் இசையைக்கூட்டினால், அப்புறம் நாம் கர்த்தருடைய சித்தம் செய்கின்றவர்களாயிருப்போமா?

மீண்டும் பவுல், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி" (கொலோ.3:16) என்கிறார். இங்கே பவுல் என்ன சொல்கிறார்? அவர் ஆவிக்குரிய மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் வார்த்தையினாலும் போதித்து புத்திசொல்லிக் கொண்டு கர்த்தரைத் துதித்துப்பாடுவதின் மூலம் கிரியை நடப்பியுங்கள் என்று கிறிஸ்துவின் வசனத்தை வலியுறுத்திச் சொல்லுகிறார். அதுவே உண்மையாயிருக் கின்றது, பவுலுடைய கூற்றில் வாத்தியகருவி இசையை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக காண்கிறீர்களா? இல்லையென்றால், ஆராதனையில் தேவனை ஸ்தோத்தரித்துப்பாட வாத்தியக்கருவி இசையை இணைக்கும்படி தொடர்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு கூட்டிக் கொண் டவர்களாயிருக்கமாட்டீர்களா?

ஆனால் இதனால் ஒன்றும் தவறில்லையென நீங்கள் விவாதிக்கலாம். பிறகு யாரும் எந்தகாரியத்திலும், வேறொன்றிலும் இதில் தவறொன்றையும் காணவில்லை எனத் தொடர்ந்து கூறலாம். முக்கிய குறிப்பானது, நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையில் கண்டிப்பாக உறுதியாயிருக்க வேண்டும். நாம் அவ்வாறு இல்லையென்றால், பிறகு ஏன் எப்படியாகிலும் இது குறித்து கலங்குகிறீர்கள்?

இது எனக்குப்பிடிக்கிறது அல்லது வாத்தியக்கருவியை மீட்டும் தாலந்தையும் திறமையையும் பெற்றிருக்கிறவர்கள் பற்றிய காரியமென்ன? என்றும் நீங்கள் வாக்குவாதத்துடன் திரும்பவும் வரலாம். அவர்கள் வாத்தியக்கருவிகள் மூலம் சங்கீதம் பாடிக் கர்த்தரை ஸ்தோத்தரித்தால் தேவன் அதனால் மகிமைப் படுத்தப்படமாட்டாரா? மீண்டும் நான் என்ன விரும்புகிறேனோ அதுபற்றிக் கவலை இல்லை, ஆனால் இது தேவன் என்ன விரும்புகிறாரோ அது பற்றியதாகும். ஒருவர் வாத்தியக்கருவியை இசைக்கும் தாலந்து அல்லது திறமை பெற்றிருந்து, அதன் அடிப்படையில் தேவனைத் துதிக்கும்படி அவன் வாத்தியக்கருவியை இசைக்க

அனுமதிக்கப்படவேண்டுமானால், அந்த தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிராத மற்றவர்கள் பற்றிய காரியம் என்ன? அந்தத் திறமைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டுமென அப்பேர்பட்ட திறமைகளை ஆராதனைக்குள் திறமையற்றஅவர்கள் கொண்டுவரவேண்டுமென நாம் வாதிப்போமா? இந்தக் குறிப்பை நீங்கள் கவனிப்பீர்களென நான் நினைக்கிறேன்.

நீங்கள் வாத்தியக் கருவி இசையை வீட்டில் வாசித்துக்கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் ஆராதனையில் அதை பயன்படுத்தலாம் என மீண்டும் இது விவாதிக்கப்படுகிறது, உண்மை என்னவென்றால், நம்மால் ஆராதனைக்குள் கொண்டு செல்ல இயலாத அநேக பொருட்கள் வீட்டில் காணப்படுகிறது. என்னுடைய குடும்பமும் நானும் இசையை விரும்புகிறோம், நாங்கள் வானொலியில், அல்லது கேசட் ரிக்கார்டில் இசையை உற்றுக்கேட்பது வழக்கம், ஆனால் ஆராதனைக்கு வரும்போது எங்களைப் பிரியப்படுத்துகிற அந்த காரியங்களை நிறுத்தி விட்டு, கர்த்தரைப் பிரியப்படுத்துகிற காரியத்தையே செய்ய ஆரம்பிக்கிறோம். நாம் வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஐஸ் டீ சாப்பிடவும் விரும்புகிறோம், ஆனால் இந்தக் காரியங்களெல்லாம் ஆராதனைக்கு வெளியே செய்யப்பட வேண்டியதென நாம் உணருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் இதைப் பற்றி போதித்தார்களென உரிமைபாராட்டி ஆராதனையில் வாத்தியக் கருவி இசையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பது முக்கியமான வாக்குவாதங்களில் ஒன்றாயிருக்கிறது. அவ்வாறு இருந்ததோ இல்லையோ, பழைய ஏற்பாடு பிரமாணம் தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை என்பது உண்மை, ஏனென்றால் கிறிஸ்து அதை எடுத்துப் போட்டு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அதை நாம், "…. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17) என வாசிக்கிறோம். கிறிஸ்து நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒழிந்து போகாது என்று சொன்னார் (மத்.5:17,18). கிறிஸ்து சிலுவையின் மேல் மரித்தபோது அதை நிறைவேற்றினார், இவ்வாறாக பழைய பிரமாணத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார் (கொலோ.2:14). இந்தக் காரியம் இவ்வாறிருக்கையில், நாம் சங்கீதத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதியை இன்று ஆராதனையில் வாத்தியகருவி இசையை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாது. நம்முடைய தற்போதைய காலத்தில் செய்யாத மற்றும் செய்ய இயலாத பல காரியங்கள் அப்போது செய்யப்பட்டது.

இதை நியாயப்படுத்தும் முயற்சியில் இன்னொரு முக்கியமான வாக்குவாதம், பரலோகத்தில் இசைக் கருவி பயன்படுத்தப்படும் என்பதாகும். பரலோகத்தில் இசைக்கருவி இருக்குமானால், நிச்சயமாக நாம் இந்த பூமியிலே ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர்கள் தீர்மானிக்கின்றனர். உண்மையாகவே அவர்கள் வாத்தியக்கருவியைப் பற்றிபேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நேரடியான மனிதனால் உருவாக்கப்பட்ட, இயந்திர இசைக்கருவிகள் இருக்குமென வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் அல்லது வேறெங்கே வாசிக்க முடிகிறது? ஆனால் அப்படியே வாத்தியக்கருவியின் இசை இருக்குமானால், இன்று ஆராதனையில் அதை பயன்படுத்தும்படி நமக்கு கர்த்தர் அனுமதியளித்துள்ளார் என அர்த்தமாகிறதில்லை. பூமியிலே நாம் பெற்றிராத அநேகப் பொருட்கள் பரலோகத்தில் உள்ளன என்பது



பாருங்கள். அவன் வேதப்புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனை சந்தித்தான். ஒரு எளிமையான வினா விவாதம் இயேசுவினிடத்திற்கு வழிநடத்தியது. அவன் அந்த மனிதனிடம் அவன் வாசித்துக்கொண்டு வந்த வேதப்பகுதியை அவன் புரிந்து கொண்டானா எனக்கேட்டான்.

■ யாரேனும் தேவனுடைய வார்த்தையை வாசித்துக் கொண்டிருப்பதை நாம் அறிந்தால் கேட்பதற்கு இது ஒரு மிக எளிமையான, எளிதான வினாவாக இருக்கிறது.

■ அநேக மக்கள் வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது என்பதை அறியாமலிருக்கிறார்கள் மேலும் அவர்கள் அச்செய்தியைப் பற்றி யாரேனும் ஒரு நல்ல விளக்கத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தேவையில் இருக்கின்றனர்.

■ எப்போதும் இயேசுவைக் குறித்த உரையாடலை துவங்குவதற்கு இது ஒரு நல்ல வழியாகயிருக்கிறது, அத்துடன் முழு வேதாகமும் இயேசுவைப் பற்றியே குறிப்பிடுகிறது என்பதை பகிர்ந்துகொள்ள இது ஒரு சிறந்த வழி.

■ வேதாகமத்தின் சாராம்சம் மனிதவர்க்கத்திற்கான இரட்சிப்பும் இயேசு கிறிஸ்து மூலமாக தேவனை மகிமைப்படுத்துதலும் ஆகும்.

■ நாம் வேதாகமத்தின் எந்தப்பகுதியினையும் திருப்பக்கூடியவர்களாகவும், முடிவில் எல்லாவற்றையும் தொகுத்து இயேசுவைபற்றி பேசக்கூடியவர்களாகவும் இருக்கத் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். இதைத் தான் அப்.8ல் பிலிப்பு செய்தான் அந்த வேதவாக்கியத்தை வாசித்த பிற்பாடு "அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் போதித்தான்" (அப்.8:35) என்று இப்பகுதி கூறுகிறது.

● இயேசுவைக் குறித்துப் பேசுவதற்கு இன்னொரு ஊகித்தறியக்கூடிய வழி, உங்களுடைய நண்பர்களில் ஒருவரை உங்களோடு கூட ஆராதனையில் பங்குகொள்ளும்படி அழையுங்கள்.

● நீங்கள் வீட்டிற்குத் திரும்பும்போது அது காரில் வீட்டிற்குத் திரும்பும் வழி நீங்கள் இவ்வினாக்களைக் குறித்து பேசலாம். அப்போஸ்தலர் பவுல் மற்றவர்களுடன் கூடி ஆராதனை செய்த பின்பு அடிக்கடி ஜனங்கள் அதிகமதிகமாக தன்னிடம் வரவேண்டுமென விரும்பினார். அப்.17:2,3ல் நாம், "பவுல் தன் வழக்கதின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து, கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான்" என வாசிக்கிறோம்


**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**
Contact: 94435 58041

தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்கிறது.

இயேசு, தேவன் யாரென்பதை நமக்கு வெளிப்படுத்தினார். யோவான் 1:18ல், நாம் "தேவனை ஒருவனும் ஒருக்காலுங்கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்று வாசிக்கிறோம்.

இயேசு ஒருவர் மாத்திரமே, தேவன் யார் என்பதை உறுதிப்படுத்தினார். இயேசுவின் திட்டமான போதனைகள் புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் போன்ற புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவருடைய அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் மூலமாக இயேசு புதியஏற்பாட்டின் எல்லாப் புத்தகங்களில் போதிக்கப்படுகிறார், ஏனென்றால் இது கர்த்தருடைய வார்த்தைகளை நினைப்பூட்டும்படி அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு போதிக்கப்பட்டது.

இயேசு தாமே, "என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" என்றார் (யோவா.14:16). எனவே உண்மையாகவே நாம் எப்போது புதிய ஏற்பாட்டினைப் படித்தாலும், நாம் இயேசுவைப் பற்றியும் அவருடைய செய்தியைப் பற்றியும் படிக்கிறோம். நாம் புதிய ஏற்பாட்டுப் பகுதியினை வாசிக்கும்போது, நாம் இயேசுவைக் குறித்து படிக்கிறோம் என்று நிச்சமுள்ளவராயிருக்க முடிகிறது.

புதிய ஏற்பாட்டின் பிரதான செய்தி என்னவென்றால் தேவனோடு இருந்தவரும் மனிதவர்க்கத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தவருமாகிய இயேசுவைப் பற்றியதே ஆகும். முந்தைய பாடத்தில் நாம் படித்தபடி பாவம் மனிதவர்க்கத்தை தேவனிடத்திலிருந்தும் ஒருவருக்கொருவரிடமிருந்தும் பிரிக்கிறது. இயேசு ஒருவர் மத்திரமே இந்த இடைவெளியை இணைக்க முடிந்தது ஏனென்றால் அவர் மாத்திரமே பாவமில்லாதவராய் வாழ்ந்தார் மேலும் பாவங்களுக்காக குற்றமற்ற பலியாக ஒப்புக்கொடுத்தார். எபேசியர் 2, "எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிருத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி,பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" (எபே.2:14-16) என்று நமக்குச் சொல்லுகிறது. ஏனென்றால் கிறிஸ்து தம்மைத் தாமே தாழ்த்தி மரணபரியந்தம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவராகி, உலகத்திற்கு இரட்சிப்பை அருளத்தக்கதான தேவனோடு ஒப்புரவாக்கும் மத்தியஸ்தராயிருக்கும்படி அவர் அதிகாரம் கொடுக்கப்பட்டவராயிருக்கிறார் (மத்தேயு 28:18-20, பிலப்பியர் 2:5-11).

**இதை நாம் எவ்வாறு பிரயோகிக்கிறோம்?**

நம்முடைய வாழ்வில் அவரைக்குறித்து பேசுவதற்கு ஊகித்தறியக்கூடிய வழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம். நாம் எவ்வாறு மற்றவர்களுக்கு இயேசுவைப் பிரசங்கிக்கிறோம், எவ்வாறு போதிக்கிறோம்? அப்போஸ்தலர் நடபடிகள் 8 ல் பிலிப்புவின் மாதிரியை ஆழ்ந்து யோசித்துப்



உண்மையான விஷயம். தேவன் குறிப்பாக ஆராதனையில் இன்று என்ன எதிர்பார்க்கிறார் மேலும் கடைசியாக பரலோகத்தில் தோற்றமளிக்கிற இருவேறுபட்ட பொருட்கள் என்ன.

வேதாகம வித்துவான்களும், பெரிய மதத்தலைவர்களும் பல வருடங்களுக்கு மேலாக வேதவாக்கியங்கள் மற்றும் வேறு குறிப்புகள் போன்ற இரண்டிலுமிருந்தும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லையென ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனபடியினால் இந்த தலைவர்களில் பலர் அவர்களுடைய நாட்களிலும் மற்றும் நம்முடைய நாட்கள் வரைக்கும் தேவனை ஆராதிக்கையில் ஜனங்கள் வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று தீர்மானித்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை இறுதியாகப் பிரிந்தது, இந்த பிரிவு தேவனைத் துதிப்பதில் வாத்தியக்கருவி இசை தங்களுடைய பாடல்களில் இடம்பெறவேண்டுமா என்ற கேள்வியை கொண்டுவந்தது என்பது பல காரியங்களில் ஒன்று. அந்தக் குழு இது சேர்க்கப்பட வேண்டுமென நினைத்து, ரோம கத்தோலிக்க சபையாக மாறியது, ஆகவே அவர்கள் இன்றுவரை அதை பயன்படுத்திவருகிறார்கள். இன்னொரு குழு வாத்தியக்கருவி இசையை பயன்படுத்த மறுத்து, கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை என மாறியது, அவ்வாறாக இவர்கள் இன்று வரை தங்கள் ஆராதனை வேளைகளில் அவைகளைப் பயன்படுத்துகிறதில்லை. அதற்கப்புறம், சீர்திருத்தலும் பிராட்டஸ்டண்ட் இயக்கங்களிலும், ஜான் வெஸ்லி போன்ற மனிதர்கள், தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளில் முன்குறிக்கப்பட்டுள்ளபடி ஆராதனைக்குரிய தேவனுடைய தெய்வீக திட்டத்தில் இப்பேர்பட்ட வாத்தியக்கருவி இசையை சேர்ப்பதற்கு தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனங்கள் உள்ளன. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு கர்த்தரும், சீஷர்களும் உருவாக்கிய ஒரு கூற்றுடன் ஆரம்பிப்போம். “அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்” (மத்.26:30) என வாசிக்கிறோம். பிறகு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு கால்கள் தொழுமரத்திலே மாட்டப்பட்டு அவர்கள் உட்காவலறையிலே அடைக்கப்பட்டார்கள், இவைகளெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால் ஏற்பட்டது, இது, “நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்” (அப்.16:26) என்று சொல்கிறது. பவுல் கொரிந்துப்பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு “என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்” (2கொரி.14:14,15). என்று எழுதினார். யாக்கோபு, “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்” (யாக்.5:13) என்றார். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சங்கீதம் பாடுவது பற்றி பல கூற்றுகள் உள்ளன. யோவான், “தேவரீர் புஸ்தகத்தை

வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்றும் “அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” (வெளி.15:3) என்று எழுதினார். முன்பு அறிவித்தபடி வெளிப்படுத்தின விசேஷம் எவ்வாறு யோவான் பரலோகத்தில் சத்தத்தைக் கேட்டான் என்பது பற்றியும் கூறுகிறது, “...... நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது” (வெளி.14:2) என்றான். ஆனால் தயவு செய்து கவனியுங்கள் அவன் பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தையும் கேட்டான் மேலும் அவன் நான்கு மிருகங்களைக் குறித்து பேசுகிறான். “..... பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரே...” (வெளி.14:2,3). இங்கே வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும், யோவான் தான் பரலோகத்தில் என்ன பார்த்தான், என்ன கேட்டான் என்பதைப் பற்றி மனிதனுக்குத் தெரியப்படுத்தும் முயற்சியில் பல எண்ணிக்கையிலான அர்த்த விசேஷபாஷையைப் பயன்படுத்துகிறான். ஆனபடியினால் அவன் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், சுரமண்டலக்காரர் வாசிக்கிற சுரமண்டல ஓசையைப் போலவும் கேட்டான். ஆனால் பரலோகத்தில் நேரடியான, பூமிக்குரிய, வாத்திய கருவிகள் தான் இருந்தன என்பதாக அவன் அர்த்தப்படுத்தவில்லை.

சங்கீதம் பாடுவது அல்லது தேவனை ஆராதிக்கையில் நம்முடைய பாட்டுடன் வாத்தியக்கருவியின் இசையைக் கொண்டிருத்தல் போன்ற காரியத்தோடு, இது பிரமாணத்திற்கடுத்த ஒரு காரியமாகும். வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கே பேசுவோம், அது எங்கு அமைதியாயிருக்கிறதோ அங்கே அமைதியாயிருப்போமா அல்லது தேவன் சொல்லியிருக்கிறவற்றிற்கு புறம்பாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதை தொடர்ந்து செய்வோமா? வேதாகமம் கிறிஸ்து பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவராயிருக்கிறா ரெனவும் ஆனபடியினால் அவர் பேசியிருக்கிறார் எனவும் கூறுகிறது. ஆகவே நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கனத்தை செலுத்தி அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாறாக வேறொன்றையும் செய்யக்கூடாது. ஆனபடியினால் நாம் ஆராதனையில் வாய்மொழி சங்கீதம் அல்லது பாட்டு பாடுவதற்கு மட்டும் இடமளிக்க நம்முடைய இசைக் கருவி இசையைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன்பின் மட்டுமே, தேவன் அதில் பிரியமாயிருப்பாரென நிச்சயமுடையவர்களாயிருக்க முடியும்.

நீங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்கிறீர்கள்? இது நீங்கள் அறிய வேண்டிய காரியம். நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் கிறிஸ்தவராக மாற நாங்கள் விரும்புகிறோம். கிறிஸ்து, “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.....” (மாற்.16:16) என்றார். அதன் பின் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என வாசிக்கிறோம் (அப்.2:47) இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினனாக, தேவனை ஆவியோடும் உண்மையோடும் நீங்கள் தொழுது கொள்ள முடியும் (யோவா.4:24).



## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
## Evangelizing Our Friends
-TVOTI



**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

உங்களுடைய நண்பர்களுக்கு இயேசுவே தேவனுடைய செய்தியாக இருக்கிறார். தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர் தம்முடைய சீஷர்களிடத்திற்கு வந்து உலக முழுவதற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அவர்களிடம் சொன்னார். "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்.16:15). "சுவிசேஷம்" என்ற வார்த்தையின் பொருள் "நற்செய்தி" நமது இரட்சிப்புக்கென்று இயேசுவே அந்த நற்செய்தியாக இருக்கிறார். அப்போஸ்தலர் 2-ல் பேதுரு இயேசுவை கர்த்தர் என்று பகிரங்கமாக அறிவித்தான் மேலும் இன்று தேவன் அவர் மூலமாகவே எல்லோரையும் அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கிறார் என்றான். அப்.2:36-ல் அவன், "ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்". இயேசுவே கர்த்தரும் அவரே மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்கும்படி தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டவருமாயிருக்கிறார்.

அப்.4:12-ல் பேதுரு இக்கூற்றினை உருவாக்கினார், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்". இயேசு இரட்சிக்கிறார் என்பது மட்டுமல்ல, ஆனால் நாம் அவர் மூலமாகவே இரட்சிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. பிதாவாகிய தேவனிடத்திற்குச் செல்ல வேறெந்த வழியும் இல்லை. இயேசு யோவா.14:6ல், "...நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார். இதன் பொருள் கிறிஸ்தவம் மட்டுமே உண்மையான சமயமாக இருக்கிறது மேலும் இயேசு ஒருவர் மாத்திரமே தேவனுடைய உண்மையான பிரதிநிதியாக இருக்கிறார். முகமதுவோ, புத்தரோ, கன்பியூசியஸோ என்பதாகும் ஜோசப் ஸ்மித்தோ ஒருவரும் கிடையாது. வேறொருவராலும் நமக்கு இரட்சிப்பை கொடுக்க இயலாது. இயேசுவே ஒரே வழி.

நாம் இயேசுவைக் குறித்து பேசுவது அவசியமானது: அவருடைய ஜீவியம், அவருடைய ஊழியம், அவருடைய போதனை மேலும் அவருடைய மரணம். தேவனை அறிந்து கொள்ளவும் பிதாவினிடத்தில் நெருங்கிச் சேரவும் வேண்டுமென்றால் இயேசுவைக் குறித்து அதிகமாகக் கற்று கொள்வது மூலமாக மட்டுமே முடியும்.

இயேசுவின் ஜீவியமானது சாதரண ஜீவியமாக இருக்கவில்லை ஏனென்றால் அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன். யோவா.3:16, "தேவன்